மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை - திருமதி.P.அனுராதா, B.A.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2022ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 05ம் நாள் வெள்ளிக்கிழமை

இ.ம.எண்.02/2022
உள்
அசல் வழக்கு எண்.18/2021

-------------

டி.சுந்தரராஜன் ... மனுதார்/வாதி

/எதிர்/

1. டி.மோகன்ராஜ்
2. ராஜம்மாள் ... எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு 15.06.2022ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 19.07.2022ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதார்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எம்.சந்திரசேகர் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஏ.அண்ணாதுரை அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு மனுவுரைகளை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 26 விதி 9-ன் கீழ் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், மனு தபசில் சொத்தின் இயல்பு நிலை குறித்து தகுந்த கிராம நிர்வாக அதிகாரி மற்றும் நில அளவையரை வைத்து வருவாயத்துறை ஆவணங்களின்படி அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய ஓர் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து உத்தரவிடக்கோரி 15.06.2022ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2). மனுதார்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:-</u>**

பிராது தபசில் ஆ அட்டவணை சொத்து சாத்தூர் வட்டம், செவல்பட்டி ஜமீன், என்.சுப்பையாபுரம் கிராம நத்தம் குடியிருப்பில் நத்தம் சர்வே எண்.96/1ல் வாதி வீட்டிற்கும் (புது சர்வே எண்.393/3) தெற்கில், பிரதிவாதி வீட்டிற்கும் (புது சர்வே எண்.393/2) வடக்கில், தென்வடல் 12 அடி அகலம் கிழமேலாக செல்லும் பொது பாதையை மனுதாரர்/வாதியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளும், ஊர் பொதுமக்களும் காலங்காலமாக பயன்படுத்தி வருகின்றனர். பொது பாதையில் மனுதாரர்/வாதியின் அனுபவத்தை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்ததால் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. ஆகவே பிராது ஆ அட்டவணை சொத்தின் இயல்புநிலை குறித்து வருவாய்துறை ஆவணங்களின்படி தகுந்த கிராம நிர்வாக அதிகாரி மற்றும் நில அளவையரை வைத்து அளந்து, அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய ஓர் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து உத்தரவிட வேண்டியதாய் உள்ளது. இல்லாது போனால் மேற்படி மனுதாரர்/வாதிக்கு அநேக கஷ்ட, நஷ்டம் ஏற்படும். எனபே, பிராது ஆ அட்டவணை சொத்தின் (மனு சொத்தின்) இயல்பு நிலை குறித்து தகுந்த கிராம நிர்வாக அதிகாரி மற்றும் நில அளவையரை வைத்து வருவாய்த்துறை ஆவணங்களின்படி அளந்து அறிக்கையுடன் வரைபடம் தாக்கல் செய்ய ஒரு நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்து உத்தரவிடக்கோரி 15.06.2022ம் தேதி மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

**<u>3). எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரை சுருக்கம்:-</u>**

வாதி குறிப்பிட்டுள்ள "ஆ" அட்டவணைச் சொத்து என்பது கற்பனையானது. மனுதாரர்/வாதி பொதுப்பாதை என கூறும் இடமானது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு நூற்றாண்டு காலமாக அனுபவம் செய்து வருகின்றனர். அதிலும் அதனை சுற்றியுள்ள இடங்களிலும், வீடு, காரை முதலியன அமைத்து அனுபவித்து வருகின்றனர். வாதி/மனுதாரர் குறிப்பிடும் "ஆ" அட்டவணைச் சொத்து நத்தம் இடமாகும். பொதுப்பாதை என்பதற்கு எந்த அரசு ஆவணத்தையும் மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யவில்லை. அது

பொதுப்பாதையும் அல்ல. எதிர்மனுதாரர்கள/பிரதிவாதிகளின் இடமாகும். பொதுப்பாதை என மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யவில்லை. அது பொதுப்பாதையும் அல்ல. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளின் இடமாகும். பொதுப்பாதை என மனுதாரர்/வாதி குறிப்பிடும் "ஆ" அட்டவணைச் சொத்து எந்த சர்வே எண்ணில் உள்ளது என்பதையும் மனுதாரர்/வாதி குறிப்பிடவில்லை. மனுதாரர்/வாதி "ஆ" அட்டவணை சொத்து என்பதை அனுபவித்து வருவதாக கூறுவது முற்றிலும் பொய்யாகும். மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள மனுவை எதிர்மனுதாரர்/பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிர்உரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4). இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5). மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6). இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

<u>7). **தீர்வு:-**</u>

இருதரப்பும் கேட்கப்பட்டது ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. ஆவணங்களை பரிசீலனை செய்ததில், அசல் வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் இதர பரிகாரங்களுக்காக வழக்கு தாக்கல் தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி வழக்கில் எழுவினாக்கள் வனையப்பட்டு வழக்கு விசாரணைக்காக உத்தரவிடப்பட்ட நிலையில், மனுதாரர் தரப்பில் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வேண்டுமென்று இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் சொல்லப்படும் காரணங்கள் இந்த வழக்கில் இந்த சூழ்நிலையில் இந்நீதிமன்றத்தால் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிர்உரையும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. மேலும், இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதிப்போ

கஷ்ட நஷ்டமோ ஏற்படப்போவதில்லை என்பதோடு வழக்கு தரப்பினரிடையே ஏற்பட்டுள்ள அனைத்து பிரச்சனைகளுக்கும் சரியான தீர்வு காண இயலும் என்று இந்நீதிமன்றம் கருதுவதால் இம்மனுவினை அனுமதிக்க வேண்டியது அவசியம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவில், இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை வாதுரைகள் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு இம்மனு அனுமதிக்கப்பட்டு ஆணையாளராக வழக்கறிஞர் செல்வி.யோகலட்சுமி என்பவர் நியமனம் செய்யப்படுகிறார். நீதிமன்ற ஆணையர் இருதரப்பினருக்கும் உரிய அறிவிப்பு கொடுத்து தபசில் சொத்துக்களை கிராம நிர்வாக அலுவலர், சர்வேயர் உதவியுடன் இருதரப்பு ஆவணங்கள் மற்றும் வருவாய்த்துறை ஆவணங்களின் அடிப்படையில் பார்வையிட்டு அளந்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. நீதிமன்ற ஆணையாளருக்கு ஊதியமாக ரூ.5000/-ஐ மனுதாரர் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் நீதிமன்ற ஆணையாளரிடம் நேரடியாக செலுத்த வேண்டுமென்றும், நீதிமன்ற ஆணையாளர் மனு தபசில் சொத்துக்களை கிராம நிர்வாக அலுவலர், சர்வேயர் உதவியுடன் பார்வையிட்டு அளந்து அறிக்கை மற்றும் வரைபடத்தினை இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா - 02.09.2022

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின்னர் அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 05ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.

மனுதார்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:- இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி
சாத்தூர்.